**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.95/2022**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.5** |
| **Name** | **:** | திரு.குணசேகர் |
| **Father's Name** | **:** | அண்ணாமலை |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 8.11.2023.**

முதல் விசாரணை -

நான் ஆரணி உறவுசிங் போர்டில் வசிக்கிறேன். நான் தற்போது மக்கள் நல பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்பு குமாஸ்தா பணி செய்து வந்தேன். புருஷோத்தமன் என்னுடைய மைத்துனர். ஆஜர் எதிரி மற்றும் ரமேஷ் புருஷோத்தமனின் தம்பி. புருஷோத்தமன் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. புருஷோத்தமனின் அக்கா விஜயாவை நான் திருமணம்

செய்து கொண்டுள்ளேன்.

இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் புருஷோத்தமன் இறந்தது மட்டும் தெரியும். வேறு எதுவும் தெரியாது. புருஷோத்தமன் அவர் வீட்டு பக்கத்தில் உள்ள காலி மனையில் அடிப்பட்டு கிடந்தார். நான் போய் பார்த்தேன். நான் போய் பார்த்தபோது மிகவும் சீரியஸாக இருந்தார். பக்கத்து வீட்டுக்காரர் புருஷோத்தமன் விழுந்து கிடப்பதாக போன் மூலம் தகவல் சொன்னார். நான் 108 மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

மருத்துவமனையிலும் ஆம்புலன்சிலும் எப்படி அடிப்பட்டது என்று கேட்டதற்கு அடிப்பட்டு கிடந்ததை குறித்து சொன்னேன். புருஷோத்தமன், எதிரி மற்றும் ரமேஷ் ஆகிய மூவருக்கும் இடையே வீட்டை குறித்த தகராறு உள்ளது என்றால் இல்லை. நான் மாமா என்ற முறையில் அவர்களுக்குள் பஞ்சாயத்து செய்தேனா என்றால் பிரச்சனையே இல்லை.

போலிசார் என்னை விசாரணை செய்தபோது வாக்குமூலத்தில் உள்ளவாறு வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரி என்னுடைய மைத்துனர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரி ராஜசேகர் சென்னையில் டாடா ஏசி வாகனம் ஓட்டி வருகிறார். ரமேசும் சென்னையில் உள்ளார். புருஷோத்தமன் எந்த வேலைக்கும்

செல்லாமல் வீட்டிலேயே இருந்தார் என்றால் சரி தான். புருஷோத்தமன் அதிகமாக குடித்துவிட்டு ஊரில் பிரச்சனைகள் செய்து வந்தார் என்றால் சரி தான். புருஷோத்தமன் வசித்து வந்த வீட்டில் தான் புருஷோத்தமனின் தந்தை, எதிரியின் மனைவி குழந்தைகள் மற்றும் ரமேஷின் மனைவி குழந்தை வசித்து வந்தார்கள் என்றால் சரி தான்.

நான் போய் பார்த்தபோது அங்கிருப்பவர்கள் குடித்துவிட்டு மேலிருந்து நிலை தடுமாறி கீழே உள்ள அடுப்பின் மீது விழுந்துவிட்டதாக சொன்னார்கள் என்றால் சரி தான். ஆரணி அரசு மருத்துவமனையில் என்னை ஏதும் விசாரிக்கவில்லை என்றால் சரி தான். புருஷோத்தமனிடம் எந்தவொரு வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரி தான். புருஷோத்தமனுக்கு ஒரு ஊசி மட்டும் போட்டு அனுப்பி வைத்துவிட்டார்கள்.

ரமேசை யார் வரவழைத்தார்கள் என்றால் உறவினர்கள் போன் போட்டு வரவழைத்தார்கள். ஆஜர் எதிரியையும் போனில் தகவல் சொல்லி சென்னையில் இருந்து வரவழைத்தார்கள் என்றால் சரி தான். மறுநாள் மதியம் எதிரி, ரமேஷ் மற்றும் அவருடைய தந்தை வெள்ளை ஆகியோரை காவல்நிலையத்தினர் அழைத்து சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.